க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
கணக்கீடு I
நேரம் : 2 மணித்தியாலம்

- **01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்ததை வினாவில் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01. கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகள் தயாரிப்பதனையும் முன்வைப்பதனையும் சட்டரீதியான ஒரு தேவையாக ஆக்கியிருப்பது
    1. 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிச் சட்டத்தினூடாக.
    2. 1995ம் ஆண்டின் 15ம் இலக்க கணக்கீடு, கணக்காய்வு சட்டத்தினூடாக.
    3. 1840ம் ஆண்டின் 44ம் இலக்க மோசடி தவிர்ப்பு சட்டத்தினூடாக.
    4. 2003ம் ஆண்டின் 09ம் இலக்க நுகர்வோர் செயற்பாடு தொடர்பான அதிகாரசபை சட்டத்தினூடாக

02. நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல், முன்வைத்தல் சட்டவிதிக்கமைய நிதிக்கூற்றுகளின் இரண்டு அடிப்படை எடுகோள்கள் எவை?
    1. அலகுசார், தொடர்ந்து இயங்குதல்
    2. அலகுசார், அட்டுறு
    3. அலகுசார், கால அளவீடு
    4. காலஅளவீடு, பணஅளவீடு
    5. அட்டுறு தொடர்ந்து இயங்குதல்

03. நிறுவனம் ஒன்றில் பொதுத்தினசேரியில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எது பதியப்படும்?
    1. கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட எல்லாச் சொத்துகளும்
    2. மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட எல்லாக் கொள்வனவுகளும்.
    3. மீள்விற்பனை செய்யும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்ட எல்லாக் கடன் கொள்வனவுகளும்
    4. கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட எல்லா ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள்.
    5. கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட எல்லா விற்பனைகளும்.

04. நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது மூடப்படும் கணக்குகள் எவை?
    1. உரிமை, சொத்துக்கள்
    2. பொறுப்புகள், சொத்துக்கள்
    3. வருமானம் செலவினங்கள்
    4. சொத்துக்கள் செலவினங்கள்
    5. வருமானம், பொறுப்புக்கள்

05. சமந்தா வரையறுத்த கம்பனியிடமிருந்து ரூபா 500,000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இவற்றுள் ரூபா 50,000 பொருட்கள் குறித்த விபரங்களுக்கு அமையாமையால் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. பின்னர் மிகுதித் தொகையைத் தீர்ப்பதற்கு வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டது. இக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குத் தேவையான மூல ஆவணங்களின் உரிமை முறை யாது?
    1. விலைப்பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
    2. விலைப்பட்டியல், செலவுத்திறன், பற்றுச்சீட்டு
    3. விலைப்பட்டியல், வரவுத்தாள், வங்கிக்கூற்று
    4. விலைப்பட்டியல், செலவுத்திறன், வங்கிக்கூற்று
    5. விலைப்பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்பு, உறுதிச்சீட்டு

06. பின்வரும் கூற்றுகளில் தொடர்ந்து செயற்படும் எண்ணக்கருவைக் குறித்து நிற்கும் கூற்று.
    1. வணிகம் எப்போதும் இலாபத்தில் ஒரு பகுதியை நிறுத்தி வைத்திருக்கும்.
    2. கடன்கொடுத்தோருக்குச் செலுத்துவதற்கு வணிகத்தில் தேறியளவு திரவச் சொத்துக்கள் வைத்திருக்கப்படும்.
    3. வணிகம் நீண்ட காலத்திற்கு செயற்படும் என்னும் ஊகத்தின் அடிப்படையில் கணக்குகள் பேணப்படும்.
    4. வணிகம் நீண்ட காலத்திற்கு நட்டமடைவதை தவிர்த்துக் கொள்ளல்.
    5. வணிகத்தின் சொத்துக்களில் பெறுமானம் பொறுப்புகளின் பெறுமானத்திலும் கூடுதலாக இருக்கும்.

07. பெறுமானத் தேய்வு என்பது?

1. சொத்தொன்றின் சந்தைப் பெறுமதிக் குறைவை அதன் பயன்தரு ஆயுள் காலத்திற்கு ஒழுங்கு முறையில் பகிர்ந்து ஒதுக்குதல்.
2. ஒரு சொத்தின் பெறுமானத் தேய்விடத்தக்க தொகையை அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் முறையாக பகிர்ந்து ஒதுக்குதல்.
3. சொத்து மீள்வைத்தலுக்கான நிதியினை ஒழுங்கு முறையாக ஒதுக்குதல்.
4. நடைமுறை சந்தைப் பெறுமதியை வெளிப்படுத்தக் கூடியவாறு சொத்தின் பெறுமதியைச் சீராக்குதல்.
5. சொத்து பாவனைக்குறைவு பெறுமதியை ஒழுங்கு முறையாகப் பதிவழித்தல்.

08. உதிரிப் பாகங்கள் ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திற்கு பாவனை செய்யக் கூடியதாக இருந்த போதிலும் இவை கொள்வனவு செய்யப்படும் வருடத்தில் இலாப நட்டக் கணக்கில் இதன் கிரயம் முழுமையாகப் பதியப்பட்டுள்ளது. இவற்றைக் கணக்கீட்டு எவ் எண்ணக் கருவிற்கமைவாக மேற்கொள்ளப்படும்.

1. முன்னெச்சரிக்கை
2. இணைதல்
3. காலஅளவு
4. அட்டுறு
5. பொருண்மை

09. வரையறுத்த திவ்யா கம்பனியின் 2012.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

காசுக்கொள்வனவு	345000
கடன் கொள்வனவு	46,000
காசுக்கு விற்பனை	690,000
கடன் விற்பனை	230,000

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (vat) 15% இக் கொடுக்கல் வாங்கல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வருமான வரித் திணைக்களத்திற்கும் இக்கம்பனி செலுத்த வேண்டிய வரித்தொகை யாது?

1. ரூபா 69,000
2. ரூபா 51,000
3. ரூபா 90,000
4. ரூபா 120,000
5. ரூபா 45,000

10. ராஜா வரையறுத்த கம்பனி தனது எல்லாக் காவுப் பெறுவனவுகளையும் தினமும் வங்கியில் வைப்பிலிடுவதுடன் எல்லாக் கொடுப்பனவுகளையும் காசோலைகளினூடாகச் செய்கின்றது. பின்வருவன கம்பனியின் மாதமொன்றுக்கான தகவல்கள் ஆகும்.

- மாதத் தொடக்கத்திலுள்ள வங்கிக்கூற்று மீதி, காசேட்டு மீதிகள் முறையே ரூபா. 16000, ரூபா 25000 ஆகும்.
- காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 196,000
- காசுக்கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 199,000
- மாதக் கடைசியில் காணப்படும் வங்கிக்கூற்று மீதிக்கும் காசேட்டு மீதிக்கும் இடையே வேறுபாட்டிற்கு ஒரேயொரு காரணம் வங்கிக்கூற்றில் காணப்படும் வங்கிக் கட்டணம் ரூபா 7000 ஆகும்.

வங்கிக்கூற்றின்படி மாத முடிவிலுள்ள மீதி எது?

1. ரூ. 10,000
2. ரூ. 15,000
3. ரூ. 25,000
4. ரூ. 7,000
5. ரூ. 3,000

11. நிறுவனமொன்றின் 2012.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு (draft) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்த பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- கடன் கொடுத்தோருக்குக் கொடுத்த காசு ரூபா. 25300 ஆனது கடன் கொடுத்தோர் கணக்கில் ரூபா 23500 ஆகப் பதியப்பட்டுள்ளது.
- கடன் கொள்வனவு ரூபா 35000 ஆனது கொள்வனவுக் கணக்கில் ரூபா 3500 என வரவு வைக்கப்பட்டுள்ளது.
- கொள்வனவுத் திரும்பல் ரூபா 5000 ஆனது கொள்வனவுக் கணக்கில் செலவு வைக்கப் பட்டுள்ளது.

இவ்வழுக்கள் காரணமாக நிறுவனத்தின் இலாபம் எவ்வளவு தொகையால் அதிகமாகக் காட்டப் பட்டுள்ளது.

1. ரூபா 1,800
2. ரூபா 31,500
3. ரூபா 5,000
4. ரூபா 38,300
5. ரூபா 35,000

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 12ஆம் 13ம் வினாக்களுக்கு விடை தருக.
வரையறுத்த துரைராஜா கம்பனி 01.04.2011இல் வணிகத்தை ஆரம்பித்தது. 31.03.2012இலுள்ள வாறான பௌதிக இருப்புகளின் கிரயம் ரூபா 50,000 31.03.2012 வரையில் காலாவதியடைந்த உருப்படிகளின் கிரயம் ரூபா. 10,000 (இது பௌதிக இருப்புக்களில் உள்ளடக்கவில்லை இவற்றை விநியோகத்தர்களுக்கு திருப்பி அனுப்ப முடியும்)
31.03.2012இல் முடிவடைந்த ஆண்டில் கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூபா. 210,000
31.03.2012இலுள்ளவாறான கடன்பட்டோர் ரூபா. 40,000, விநியோகத்தர்கட்கு செலுத்திய காசு ரூபா 150,000 விற்பனைக் கிரயத்தில் 25% மொத்த இலாபமாக எப்போதும் பேணப்படும் எல்லாக் கொள்வனவு களுக்கும் விற்பனைகளும் கடனுக்கே மேற்கொள்ளப்படுகின்றன.

12. 31.03.2012இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனைக் கிரயம் யாது?
1. ரூபா 190,000 2. ரூபா 150,000 3. ரூபா 210,000
4. ரூபா 200,000 5. ரூபா 250,000

13. 31.03.2012இல் விநியோகத்திலிருந்து செலுத்த வேண்டியுள்ள தொகை யாது?
1. ரூபா 250,000 2. ரூபா 260,000 3. ரூபா 200,000
4. ரூபா 110,000 5. ரூபா 100,000

14. கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் பட்டியலுடன் கடன்பட்டோர் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கை இணக்கியபோது பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- விற்பனை நாளேடு ரூபா 50,000இனால் குறைவாகக் காட்டப்பட்டது.
- கடன்பட்டோரொருவரின் தனிப்பட்ட கணக்கு ரூபா 5000இனால் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது.

இப்பிழைகளைத் திருத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள சீராக்கங்களில் எதனை மேற்கொள்ளுதல் வேண்டும்.

	கடன் பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	கடன்பட்டோர் மீதிகளின் பட்டியல்
1.	ரூபா 50,000ஐ செலவு வைத்தல்	ரூபா 5,000 இனால் குறைவடைதல்
2.	ரூபா 50,000ஐ வரவு வைத்தல்	ரூபா 5,000 இனால் அதிகரித்தல்
3.	ரூபா 50,000ஐ வரவு வைத்தல்	ரூபா 5,000 இனால் குறைவடைதல்
4.	ரூபா 50,000ஐ செலவு வைத்தல்	ரூபா 5,000 இனால் அதிகரித்தல்
5.	ரூபா 50,000ஐ செலவு வைத்தல்	மாற்றமில்லை

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 15ஆம் 16ஆம் வினாக்களுக்கு விடை தருக. சூரியன், சந்திரன் ஆகியோரின் பங்குடமை உடன்படிக்கையில் மூலதன வட்டி செலுத்துதலைத் தவிர இலாபப் பகிர்வு தொடர்புடைய உடன்படிக்கை இருக்கவில்லை. 2012.03.31இல் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

வருடத்திற்கான இலாபம்		ரூபா	200,000
செலுத்திய மூலதன வட்டி – வருடத்திற்கானது	- சூரியன்	ரூபா	40,000
	- சந்திரன்	ரூபா	60,000
வருடத்திற்கான பற்றுக்கள்	- சூரியன்	ரூபா	25,000
	- சந்திரன்	ரூபா	20,000
2011.04.01இல் நடைமுறைக் கணக்கு மீதிகள்	- சூரியன்	ரூபா	30,000
	- சந்திரன்	ரூபா	50,000
2012.03.31இல் மூலதனக் கணக்கு மீதிகள்	- சூரியன்	ரூபா	400,000
	- சந்திரன்	ரூபா	600,000

15. இலாபப் பகிர்வுக்குப் பின்னரான 2012.03.31இலுள்ள சந்திரனின் நடைமுறைக் கணக்கு மீதி யாது?
1. ரூபா 150,000 2. ரூபா 140,000 3. ரூபா 90,000
4. ரூபா 80,000 5. ரூபா 70,000

16. 2012.03.31இல் பங்குடமை வியாபாரத்தின் மொத்த உரிமையாண்மை யாது?
1. ரூபா 1,235,000 2. ரூபா 1,280,000 3. ரூபா 1,135,000
4. ரூபா 1,080,000 5. ரூபா 1,000,000

17. சிங்கன், வீரன், சூரன் ஆகியோர் இலாப நட்டத்தைச் சமமாகப் பகிரும் பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர். 2012 மார்ச் 31இல் சிங்கன் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத் தினத்தில் வியாபாரத்தின் நன்மதிப்பு மூலதனக் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டது. வீரனும் சூரனும் வியாபாரத்தைத் தொடர்ந்து நடாத்தத் தீர்மானித்தனர்.

மூலதனக் கணக்கு மீதிகள்	வீரன் (ரூபா)	சூரன் (ரூபா)
சீராக்கத்திற்கு முன்னரான நன்மதிப்பு	200,000	150,000
சீராக்கத்திற்கு பின்னரான நன்மதிப்பு	160,000	140,000

பங்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த நன்மதிப்புத் தொகை என்ன?

1. ரூபா 10,000 2. ரூபா 250,000 3. ரூபா 50,000
4. ரூபா 75,000 5. ரூபா 150,000

18. மதுரா வரையறுத்த கம்பனி 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்தில் 2,000,000 பங்குகளுக்கு ஆரம்ப பொது வழங்கலைச் செய்தது. 3,000,000 பங்குகளுக்கு பெற்ற காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 30,000,000 ஆகும். 500,000 பங்குகளுக்கு முற்றாக ஒதுக்கப்பட்டது. ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு விகிதார முறைப்படி ஒதுக்கப்பட்டன. பங்கு விநியோகச் செலவுகள் ரூபா. 1,500,000 ஆகும். மிகையாகப் பெற்ற பணத்திற்கான காசோலைகள் 30.04.2012இல் அனுப்பி வைக்கப்பட்டன.

31.03.2012இலுள்ளவாறான கூறப்பட்ட மூலதனம் யாது?

1. ரூபா 18.5 மில்லியன் 2. ரூபா 28.5 மில்லியன் 3. ரூபா 20.0 மில்லியன்
4. ரூபா 25 மில்லியன் 5. ரூபா 30 மில்லியன்

19. சந்திரா வரையறுத்த கம்பனியின் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தகவல்கள் வருமாறு

	2011.04.01இல் உள்ளவாறான மீதிகள்	2012.03.31இல் உள்ளவாறான மீதிகள்
நிறுத்தி வைத்த இலாபங்கள்	ரூபா 200,000	ரூபா 300,000
பொருத்துகள்	100,000	150,000
மீள் மதிப்பீட்டு நிலுவை	75,000	125,000

2011/2012 ஆண்டிற்கான செலுத்திய பங்கிலாபம் ரூபா 80,000 ஆகும். மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2012.03.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்குப் பின்னரான இலாபம் யாது?

1. ரூபா 230,000 2. ரூபா 200,000 3. ரூபா 150,000
4. ரூபா 100,000 5. ரூபா 50,000

20. நிறுவனமொன்றின் நடைமுறைச் சொத்து விகிதமானது அதன் விரைவு விகிதத்தின் இரு மடங்கை இருக்கும்போது பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?

1. நடைமுறைச் சொத்தானது நடைமுறைப் பொறுப்புக்களின் அரைவாசிக்குச் சமன்
2. சரக்கிருப்பு நீங்கலாக நடைமுறைச் சொத்துக்கள் சரக்கிருப்பின் இரண்டு மடங்காகும்.
3. சரக்கிருப்பானது நடைமுறைச் சொத்துகளின் அரைவாசிக்குச் சமன்
4. நடைமுறைப் பொறுப்புக்களானது நடைமுறைச் சொத்துகளின் இரண்டு மடங்காகும்.
5. நடைமுறைச் சொத்துக்களானது நடைமுறைப் பொறுப்புக்களின் இரண்டு மடங்காகும்.

21. நிறுவனமொன்றின் இணைப்பினை (gearing) மதிப்பிடுவதற்கு மிகப் பொருத்தமான விகிதம் பின்வருவனவற்றுள் எது?

1. நடைமுறை விகிதம்
2. வட்டிக்காப்பு விகிதம்
3. கடன் கொடுத்தோர் புரள்வு விகிதம்
4. மொத்தச் சொத்துக்கள் புரள்வு விகிதம்
5. மொத்தச் சொத்துக்களுக்கு கடன் விகிதம்

22. கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் எடுக்கப்பட்டுள்ளன.

	2011.04.01இல் உள்ளபடி	2012.03.31இல் உள்ளபடி
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	ரூபா 400,000	ரூபா 600,000
நிறுத்தி வைத்த வருமானம்	ரூபா 400,000	ரூபா 600,000
நடைமுறையல்லா சொத்துக்கள்	ரூபா 1,000,000	ரூபா 600,000

2012.03.31இல் முடிவடைந்த ஆண்டின் பங்கிலாபம் எதுவும் செலுத்தப்படவில்லை. 2012.03.31இல் முடிவடைந்த ஆண்டின் பங்கிலாபம் எதுவும் செலுத்தப்படவில்லை. 2012.03.31இல் முடிவடைந்த ஆண்டிற்கு கம்பனியின் சராசரி தேறிய சொத்துக்கள் மீதான வருவாய் பின்வருவனவற்றுள் எது?

1. 20% 2. 25% 3. 33.3% 4. 40% 5. 50%

23. 2012.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் 2012.06.30இல் இயக்குனர்கள் கையொப்பமிட்டுள்ளனர். நிதிக்கூற்றுக்கள் 2012.07.15இல் இடம்பெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டது.
கீழ்வரும் நிகழ்வுகள் தொடங்கிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

A. தீ விபத்துக் காரணமாக 2012.05.20 இல் ரூபா 250,000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

B. 2010இல் வாடிக்கையாளர் ஒருவரால் கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் 2012.06.15இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பு ரூபா 150,000 இழப்பீட்டுப் பொறுப்பினை கம்பனிக்கு ஏற்படுத்தியுள்ளது.

C. 2012.03.31இல் ரூபா 300,000 மீதியினைக் கொண்டுள்ள வாடிக்கையாளர் ஒருவர் முறிவடைந்தவராக 2011.07.05ல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். கம்பனியானது ஐந்தொகைத் தினத்தன்று இத் தொகைக்கான முழு ஏற்பாட்டையும் ஏற்கனவே செய்திருந்தது.

மேலுள்ள நிகழ்வுகளில் எவைகளுக்கு 2012.மார்ச் 31இல் முறிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் தேவைப்படுகின்றது.

1. A மாத்திரம்
2. A, B ஆகியன மாத்திரம்
3. B மாத்திரம்
4. B, C மாத்திரம்
5. A, B, C ஆகிய எல்லாம்

24. பின்வரும் தகவல்களின் அடிப்படையில் வரையறுத்த வனஜா கம்பனியின் 2012.03.31இல் முடிவடைந்த வருடத்திற்குரிய செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சலில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு எவ்வளவு?

வருடத்திற்கான இலாபம்................................ரூபா 120,000
பெறுமானத் தேய்வு ....ரூபா 20,000
வியாபாரக் கடன்பட்டோர் அதிகரிப்பு............ரூபா 60,000
சம்பளக் கொடுப்பனவுகளில் குறைவு...........ரூபா 40,000
முன்செலுத்திய செலவுகளின் குறைவு ....ரூபா 50,000

1. ரூபா 10,000
2. ரூபா 90,000
3. ரூபா 140,000
4. ரூபா 150,000
5. ரூபா 190,000

25. கம்பனியொன்று பெறுமானத் தேய்வு முறையினை நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்மீதி முறைக்கு நடைமுறையாண்டில் மாற்றியுள்ளது.

1. கணக்கீட்டுக்கொள்கை மாற்றமொன்றாக இருப்பதால் முன்னைய நிதிக்கூற்றுகளில்
2. கணக்கீட்டுக் கொள்கை மாற்றமொன்றாக இருப்பதால் எதிர்கால நிதிக்கூற்றுகளில்
3. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றமொன்றாக இருப்பதால் எதிர்கால நிதிக்கூற்றுக்களில்
4. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றமொன்றாக இருப்பதால் நிகழ்கால மற்றும் எதிர்கால நிதிக் கூற்றுக்களில்
5. கணக்கீட்டுக்கொள்கை மாற்றமொன்றாக இருப்பதால் முன்னைய கால மற்றும் நிகழ்கால நிதிக்கூற்றுக்களில்

26. கிரய அலகானது உற்பத்திப் பொருளொன்றாக இருப்பின் பின்வருவனவற்றுள் எதை நேர் மூலப்பொருட்களாக வகைப்படுத்தலாம்?

A. இரும்புக் கட்டைகளை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்திய உலோகம்
B. உற்பத்தியில் ஈடுபடுத்திய இயந்திரத்திற்கு பயன்படுத்திய எண்ணெய்கள்
C. கணிப்பான்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்திய பிளாஸ்டிக்

1. A மாத்திரம்
2. C மாத்திரம்
3. A, B மாத்திரம்
4. A, C மாத்திரம்
5. A, B, C ஆகிய எல்லாம்

27. பின்வரும் சமன்பாடுகளில் எது மொத்தக் கிரயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை?

1. மொத்தக் கிரயங்கள் = பொருட்கிரங்கள் + உற்பத்தியல்லாக் கிரயங்கள்
2. மொத்தக் கிரயங்கள் = உற்பத்திக் கிரயங்கள் + உற்பத்தியல்லாக் கிரயங்கள்
3. மொத்தக் கிரயங்கள் = உற்பத்திக் கிரயங்கள் + மொத்த மேந்தலைக் கிரயங்கள்
4. மொத்தக் கிரயங்கள் = நேர்க் கிரயங்கள் + நேரில் கிரயங்கள்
5. மொத்தக் கிரயங்கள் = உற்பத்திக் கிரயங்கள் + மொத்த மேந்தலைக் கிரயங்கள்

28. மூலப்பொருள் ‘A’ யின் காலாண்டுக்கான கேள்வி 1250 அலகுகள் ஆகும். இம்மூலப்பொருளின் அலகொன்றிற்கான கொள்விலை ரூபா 250 ஆகும். கட்டளை ஒன்றுக்கான கட்டளைக் கிரயம் ரூபா 25 ஆகவும் இருப்பு வைத்தற் கிரயமானது மூலப்பொருளின் அலகொன்றிற்கான கொள்விலையில் 10% ஆகவும் உள்ளது. இம்மூலப்பொருளின் சிக்கனக் கட்டளைத் தொகையானது பின்வருவனவற்றுள் எது?

1. 50 அலகுகள்
2. 100 அலகுகள்
3. 1,200 அலகுகள்
4. 2,500 அலகுகள்
5. 5,000 அலகுகள்

29. நேர் ஊழிய கிரயத்தின் அடிப்படையில் மேந்தலைக்கான உறிஞ்சும் கம்பனியொன்றின் பின் வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

நேர் ஊழியம்	ரூபா 400,000
நேர் மூலப்பொருட்கள்	ரூபா 800,000
தொழிற்சாலை மேந்தலைகள்	ரூபா 1,000,000
இறுதிச் சரக்கின் பெறுமதி	ரூபா 44,000

இதனுள் நேர் மூலப்பொருட்கிரயம் ரூபா 16,000 உள்ளடங்கியுள்ளது.
மேந்தலை உறிஞ்சல் வீதம், இறுதிச் சரக்கினால் உறிஞ்சப்பட்ட மேந்தலைகளின் தொகை என்பன பின்வருவனவற்றுள் எது?

	மேந்தலை உறிஞ்சல் வீதம் %	உறிஞ்சப்பட்ட மேந்தலைகள் ரூபா
1.	400	24,000
2.	125	20,000
3.	250	16,000
4.	200	8,000
5.	250	20,000

30. வரையறுத்த சித்திரா கம்பனியின் புதிய செயற்றிட்டம் ஒன்றுக்கான காசுப் பாய்ச்சல்களைக் கணிக்கும்போது பின்வருவனவற்றுள் எவ்விடயங்கள் உள்ளடக்கப்படும்

A. இச்செயற்றிட்டத்திற்கான சந்தை ஆய்வினை மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்
B. இச்செயற்றிட்டத்தில் பயன்படுத்துவதற்கெனப் பெறப்பட்ட இயந்திரத்தின் கிரயம்
C. இச் செயற்றிட்டத்தின் காரணமாக ஏற்படும் செயற்பாட்டுக் கிரயங்கள்
D. இந்த இயந்திரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எஞ்சிய பெறுமதி
E. இந்த இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு

1. A , B, C மாத்திரம்
2. B, C, D மாத்திரம்
3. C, D, E மாத்திரம்
4. A, B, C, D மாத்திரம்
5. A, B, C, D, E ஆகிய எல்லாம்

31. ஐந்தொகை திகதிக்கு பிந்திய நிகழ்வுகளை வெளிப்படுத்தல்களின் அடிப்படையில் வகைப்படுத்துக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

32. இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் குத்தகை என்றால் என்ன?

…………………………………………………………………………………………………

33. 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளினுள் இடம் பெறுவன யாவை?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

34. இலங்கை கணக்கீட்டு நியமம் காசுப்பாய்ச்சல் கூற்றில் இடம் பெறும் விடயங்களை 3 வகைகளில் உள்ளடக்கியுள்ளது. பின்வருவன எவ்வகையில் இடம் பெறும் எனக் கூறுக.

1. ஆதனம், பொறி, உபகரணங்கள், முதலீடுகள்…………………………………………….

2. நடைமுறையல்லாத பொறுப்புக்கள் …………………………………………………………………

3. நடைமுறை சொத்துக்களும் நடைமுறை பொறுப்புகளும் ……………………………….

35. பங்கொன்றின் சந்தைப் பெறுமதி பங்கு ஒன்றுக்கான உழைப்பின் எத்தனை தடவைகள் வெளிக்காட்டும் என்பதை விளக்கும் விலை உழைப்பு விகிதம் குறைந்த தடவைகளாக இருப்பின் அது எதனைக் குறிக்கும்.

…………………………………………………………………………………………………

36. இருப்பு கணிப்பீட்டு நோக்கத்துக்காக கிரயத்தை வகைப்படுத்துகையில் செயற்பாட்டு மட்டத்தில் அல்லது உற்பத்தி மட்டத்தில் அல்லது விற்பனை விகிதத்துக்கேற்ப நேர் விகிதமாக வேறுபடும் கிரயம் யாது?

…………………………………………………………………………………………………

37. நிறுவனமொன்றின் சிக்கன கட்டளைத் தொகை 600 அலகுகள் வருடாந்த இருப்பு மேலும் கிரயம் ரூபா 1800 ஆக இருந்தது. கட்டளை ஒன்றுக்கான கிரயம் ரூபா 60 ஆகும்.

1. வருடாந்த கேள்வித் தொகை யாது? ……………………………………………………..

2. அலகொன்றுக்கான வருடாந்த இருப்பு பேணும் கிரயம் யாது? …………………………….

38. தொழிற்சாலையொன்றில் விலையிடலுக்கு WAC முறையினைப் பேணுகின்றது. இவ் ஆண்டுக்கான இலாபம் ரூபா 60,000 ஆக இருந்தது. WAC முறையில் கணிப்பிடப்பட்ட இறுதி இருப்பின் கிரயம் ரூபா 40,000 ஆக இருந்தது. இறுதி இருப்பில் 1000 அலகுகள் உள்ளன. இறுதியாக 2000 அலகுகள் அலகொன்று ரூபா 45 விலையில் பெறப்பட்டிருந்தது.

FIFO முறைக்கு இருப்பு விலையிடல் மாற்றப்படின் இலாபத்தில் ஏற்படும் மாற்றம் யாது?

…………………………………………………………………………………………………

39. சம்பளப் பட்டியலினை தயாரிப்பதற்குப் பின்வரும் உருப்படிகளினைப் பெறக்கூடிய மூலங்களைக் குறிப்பிடுக.

1. அடிப்படைச் சம்பளம் ……………………………………………………………………

2. மேலதிகவேலை நேர கொடுப்பனவு ………………………………………………………….

3. ஊழியர் கடன் கழிப்பனவு …………………………………………………………………...

4. படிகள் ………………………………………………………………………

40. தொழிற்சாலையொன்றில் x,y என்னும் இரண்டு உற்பத்தி திணைக்களங்கள் ஊடாக A என்னும் பொருளை உற்பத்தி செய்கிறது. A யின் அலகு ஒன்றுக்கான மேந்தலைக் கிரயம் ரூபா 400 ஆகும். திணைக்களம் x இரண்டு இயந்திர மணித்தியாலங்களும் திணைக்களம் y மூன்று இயந்திர மணித்தியாலங்களும் பொருள் A உற்பத்தி செய்யப்பட்டது. திணைக்களம் x ன் மேந்தலை உறிஞ்சுதல் வீதம் இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 125 பதியப்பட்ட மேந்தலைக் கிரயம் திணைக்களம் x ரூபா 1250000 திணைக்களம் y ரூபா 375000 ஆக இருந்தது.

1. திணைக்களம் y இல் ஓர் அலகு A க்கான மேந்தலை கிரயம் ……………………………..

2. பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் திணைக்களம் x ற்கும் y ற்கும் முறையே

…………………………………………………………………………………………………

- 41ம் 42ம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

வரதன் வரையறுத்த கம்பனியின் 31.03.2012, 31.03.2011 இல் உள்ளவாறான ஐந்தொகைகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பொறி மற்றும் இயந்திரம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	31.03.2012 ரூபா	31.03.2011 ரூபா
பொறி மற்றும் இயந்திரவகை கிரயம்	1500000	1000,000
திரண்ட பெறுமானத்தேய்வு	500,000	400,000

மேலதிக தகவல்களுக்கு

கம்பனியானது ரூபா 300,000 கிரயம் கொண்ட இயந்திரமொன்றை 31.03.2012 இல் ரூபா 160,000 இற்கு விற்பனை செய்தது. இத்திகதியில் இவ் இயந்திரத்திற்காக கொண்டு செல்மீதி ரூபா 200,000 ஆகும். மேலும் அதே தினத்தில் புதிய இயந்திரமொன்று காசுக்கு வழங்கப்பட்டது.

41. 31.02.2012 இல் முடிவடைந்த வருடத்தில் பொறி மற்றும் இயந்திரம் தொடர்பில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு உம் பாய்ச்சல் காசு வெளிப்பாய்ச்சல்களைக் குறிப்பிடுக.

அ) காசு உட்பாய்ச்சல் …………………………………

ஆ) காசு வெளிப்பாய்ச்சல் …………………………………

42. மேற்படி கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ஏற்பட்ட காசற்ற விடயத்தை பெறுமதியுடன் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

43. பின்வருவன குறிப்பிட்டதொரு உற்பத்திப் பொருளுடன் தொடர்பான தகவல்களாகும்.

50 அலகுகள் விற்கும் போதுள்ள மொத்தக் கிரயம் ரூபா 65,000

75 அலகுகள் விற்கும் போதுள்ள மொத்தக் கிரயம் ரூபா 90,000

விற்பனை பங்களிப்பு விகிதம் (CS Ratio) 50%

ரூபா 125,000 இலாபத்தினைப் பெறும் பொருட்டு விற்பனை செய்யப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையை கணிக்குக.

……………………………………………………………………………………………………

44. ஊழியர் ஒருவரின் 2012 டிசம்பர் மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றது.

அடிப்படைச்சம்பளம்	ரூபா 25,000
வாழ்க்கைச் செலவுப்படி	ரூபா 2500
மொத்தக் கழிவுகள்	ரூபா 5000

மேலதிக தகவல்கள்

1. இதே ஊழியர் 2013 ஜனவரி மாதத்திலிருந்து ரூபா 300 சம்பள உயர்வுக்கு உரித்துடையவர்.
2. இந்த ஊழியர் 01.01.2013 இல் இருந்து பகுதித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்காக இவருக்கு மாதாந்தப் படியாக ரூபா 1000 செலுத்தப்படுகின்றது.
3. 2012 டிசம்பர் மாத்திலிருந்த வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் மொத்தக் கழிவுகள் என்பன ஜனவரி மாதத்தில் மாறாமல் இருந்தது.

   இந்த ஊழியரின் 2013 ஜனவரி மாதத்திற்கான சம்பளப் பணத்தை பதிவதற்கு நாட்குறிப்பு பதிவினை எழுதுக.

……………………………………………………………………………………………………

45. பின்வருவன தொடர்பில் முகாமைக்கு கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

	முகாமைக்கணக்கீடு	நிதிக்கணக்கீடு
தகவல்களைப் பயன்படுத்துவோர்	………………………..	…………………
அறிக்கையிடல் தடவைகள்	………………………..	…………………

46. நிறுவனம் ஒன்றிற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

2012 ரூபா 2011 ரூபா

வருடத்திற்கான இலாபம்	160000	150000
வட்டிச் செலவு	40,000	30,000
பெறுமானத் தேய்வு	20,000	20,000

அ) 2012 ஆண்டிற்கான வட்டிக் கணக்கு விகிதத்தினைக் கணிக்குக.

……………………………………………………………………………..

ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 இல் வட்டிக் கழிப்பு ஆனது அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்பதைக் குறிப்பிடுக.

……………………………………………..

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 47ம், 48ம் வினாக்களுக்கு விடை தருக.

கம்பனி ஒன்றினால் தற்போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒன்றிற்குப் பதிலாக மற்றதைப் பயன்படுத்தக் கூடிய இரண்டு செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	செயற்றிட்டம் A	செயற்றிட்டம் B
திரும்பப் பெறும் காலம் (வருடங்கள்)	3	4
தேறியதின் காலம் பெறுமதி ரூபா	100,000	125,000

47. திரும்பப் பெறும் காலத்தினை தீர்மானம் எடுப்பதற்கு பயன்படுத்தியிருப்பின் கம்பனியினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டம் எது?

……………………………………………………..

48. தேறிய நிகழ்காலப் பெறுமதியை தீர்மானமெடுப்பதற்கு பயன்படுத்தியிருப்பின் வினா இல 47 இற்கான உமது விடையில் மாற்றம் ஏற்படுமா என்பதனை காரணத்துடன் குறிப்பிடுக.

……………………………………………………..

49. ராஜா வரையறுத்த கம்பனி பெறுமதிசேர்வரி (VAT) பதியப்பட்ட கம்பனியாகும். 2012.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுமதி கீழ் வரும் கட்டுப்பாட்டுக் கணக்கின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

எல்லாக் கொள்வனவுகளும் விற்பனைகளும் அதற்கு மேற்கொள்ளப்பட்டன.

	வரவு ரூபா	செலவு ரூபா
2011.04.01 இல் மீதி	-	150,000
காசு (விற்பனையின் போது சேகரிக்கப்பட்டவை)	-	2500000
காசு (கொள்வனவுகளுக்காக செலுத்தப்பட்டவை)	650000	-
காசு (இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தியவை)	1700000	-

கொள்வனவின் போது செலுத்திய எல்லாப் பெறுமதிசேர் வரிகளையும் கழிக்க முடியும் எனக் கருதி 2012.03.31இல் உள்ள பெறுமதிசேர் வரிப் பொறுப்பினைக் கணிக்க.

……………………………………………………..

50. நிறுவனமொன்று 2011.10.01இல் இயந்திரமொன்றைப் பெறுவதற்கு ரூபா 200,000ஐக் காசாகச் செலுத்தியும் 2011.03.31இல் முன்கொண்டு செல்மீதி ரூபா 300,000ஐக் கொண்டுள்ள வாகனமொன்றை ரூபா 400,000இற்கு ஒப்புக்கொண்ட விலையில் பகுதி மாற்றம் செய்தும் பெற்றுக்கொண்டது. பகுதி மாற்றம் செய்யப்பட்ட வாகனத்தின் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 100,000 ஆகும். இயந்திரங்கள் கிரயத்தில் வருடாந்தம் 20% பெறுமானத் தேய்விடப்படுகிறது.

கணிக்குக.

அ. 2012.03.31ல் உள்ளவாறான இயந்திரத்தின் முன்கொண்டு செல்மீதி ……………………….

ஆ. வாகனப் பகுதி மாற்றத்தினால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம் ……………………….

கணக்கியல் வினாத்தாள் I விடைகள்

1	-	2	11	-	2	21	-	5
2	-	5	12	-	4	22	-	1
3	-	4	13	-	4	23	-	3
4	-	3	14	-	3	24	-	2
5	-	1	15	-	2	25	-	4
6	-	3	16	-	1	26	-	4
7	-	2	17	-	5	27	-	5
8	-	5	18	-	2	28	-	2
9	-	1	19	-	1	29	-	5
10	-	2	20	-	3	30	-	2

31. ஐந்தொகை திகதியில் காணப்பட்ட நிலைமைகளினை உறுதிப்படுத்தக்கூடிய நிகழ்வுகள் (சீராக்க கூடிய நிகழ்வுகள்) ஐந்தொகை திகதிக்குப் பின்னர் தோன்றிய நிலைமைகளை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்வுகள் (சீராக்க முடியாத நிகழ்வுகள்)

32. வாடிக்கையாளரொருவரினால் யாதேனும் சொத்தொன்று அல்லது சொத்து தொகுதியொன்று குத்தகை வழங்குனர்களின் உடன்பாட்டிற்கமைய அக்காலம் முடிவடையும் வரையில் பயன்படுத்துவதற்கான உரிமையினை ஏதேனும் கொடுப்பனவுக்கேற்ப பெற்றுக்கொள்ளப் படுமாயின் அது குத்தகை எனலாம்.

33. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி
    வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி
    வரையறுக்கப்பட்ட கரைகடந்த கம்பனி
    வெளிநாட்டுக் கம்பனிகள்

The National e-learning Portal for The General Education

34. 1. முதலீட்டு நடவடிக்கை
    2. நிதியீட்ட நடவடிக்கை
    3. செயற்பாட்டு நடவடிக்கை

35. முதலீடு செய்யப்பட்ட பணம் விரைவாக மீண்டுவரும் என்பதைக் குறிக்கும்.

36. மாறும் கிரயம்

37. 18,000 அலகுகள்
    ரூபா 6

38. ரூபா 5,000 இனால் அதிகரிக்கும்

39. 1. நியமனக் கடிதம் / சம்பள ஏற்றப் படிவம்
    2. மேலதிக நேர அனுமதி அட்டை
    3. ஊழியர் சம்மதக் கடிதம்
    4. முகாமைத் தீர்மானம் / சுற்றறிக்கை

40. 1. ரூபா 150
    2. 10,000 மணித்தியாலம், 5000 மணித்தியாலம்

41. அ. ரூபா 160,000
    ஆ. ரூபா 800,000

42. பொறி விற்பனை நட்டம் ரூபா 40,000

43. 140 அலகுகள்

44. சம்பளக் கணக்கு வரவு 28,000

மொத்தக் கழிவுகள் கணக்கு செலவு 5,000

காசு / சென்மதி சம்பளக் கணக்கு செலவு 23,800

(மொத்தச் சம்பளமும் மொத்தக் கழிவுகளும் பதியப்பட்டது)

45.

முகாமைக் கணக்கு	நிதிக் கணக்கு
உள்ளக பயன்படுத்துவோர்	வெளியக பயன்படுத்துவோர்
தேவைக்கேற்ப / தவணையில்	வருடாந்தம் / காலாண்டு

46. அ) 5 தடவைகள்

ஆ) குறைவடைந்துள்ளது

47. செயற்றிட்டம் A

48. மாற்றம் ஏற்படும்

தேறிய நிகழ்காலப் பெறுமதி கூடுதலாகக் காணப்படுவது செயற்திட்டம் Bயில் ஆகும்.

49. ரூபா 300,000

50. அ. ரூபா 540,000

ஆ. இலாபம் ரூபா 150,000